# வணிகப்பொருட்கள் வழங்குதலுக்கான C&A ஒழுக்க விதிகள்




கவனம்: இது ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. ஆங்கில பதிப்பு மட்டுமே சட்ட பூர்வமாக செல்லுபடியாகும் ஆவணம்.

- ஏப்ரல் 2015 -

# அறிமுகம்

## C&A-வின் வணிக மாதிரி என்பது, உயர்தர நாகரீக தயாரிப்புகளை கட்டுபடியாகக்கூடிய விலையில் வழங்குவதாகும்.

தொடர்ச்சியான வழியில் மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் மதிப்பளித்து அப்படி செய்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அதே வேளையில் வணிக மேன்மையின் உயர் தரத்தின் படியும் நடப்போம். இவ்வாறு செய்வதால் மட்டுமே C&A-யும் அதன் விநியோகஸ்தர்களும் நீண்ட காலத்திற்கு வெற்றிகரமாக தொடர முடியும் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

சட்டரீதியான இணக்கம், பணி செய்முறைகள், சுற்றுச்சூழல் செயல்திறன், மற்றும் ஊழல் தடுப்பு போன்றவை குறித்து விநியோகஸ்தர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறது என்பதை வணிகப்பொருட்கள் வழங்குதலுக்கான ஒழுக்க விதிகள் ('ஒழுக்க விதிகள்') விவரிக்கிறது. தர விதிகள், தயாரிப்பு தரம் மற்றும் வழங்கல் விதிகள் தொடர்பான எதிர்பார்ப்புகள், மற்ற கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களில் கூறப்பட்டுள்ளது. ஒழுக்க விதிகளிலுள்ள தேவைகள் குறித்த மேலதிக விவரங்கள் "ஒழுக்க விதிகளின் துணை வழிகாட்டுதல்"களில் விளக்கப்பட்டுள்ளது.

C&A[1]-க்காக பொருட்களை தயாரிக்கும் எல்லா விநியோகஸ்தர்களுக்கும் இத்தேவைகள் பொருந்தும். ஒழுக்க விதிகளில் கொடுக்கப்பட்டுள்ளவைகள் அதிகபட்ச தரமல்ல, குறைந்தபட்சமானவை என்பதை கவனத்தில் கொள்வது முக்கியமாகும். விநியோகஸ்தர்கள், பணிச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் செயல்பாடு ஆகியவற்றின் தொடர்ச்சியான மேம்பாட்டை லட்சியமாக கொள்ளவேண்டுமென C&A எதிர்பார்க்கிறது.

---

1. தயாரிப்பு நிறுவனங்கள், துணை நிறுவனங்கள்,இணை நிறுவனங்கள் மற்றும் முகமைகள் உள்ளிட்டவைகள். C&A- க்கான தயாரிப்புகளுக்கு மட்டுமல்லாமல் வேறு ஏதாவது மூன்றாம் நபருக்கான தயாரிப்புகளுக்கும் இத்தேவைகள் பொருந்தும்.

# தேவைகள்

## UN குளோபல் காம்பேக்டின் (உலகளாவிய உடன்பாடு) 10 கொள்கைகளின் படி C&A நடக்கிறது.

C&A விநியோகஸ்தர்கள் தங்கள் செயல்பாடுகளை பொறுப்பான வகையிலும், மக்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென C&A எதிர்பார்க்கிறது. ஒழுக்க விதிகளில் கொடுக்கப்பட்டுள்ள தேவைகள் குறித்த சுருக்கவுரையை கீழே உள்ள அட்டவணை அளிக்கிறது.

## தேவைகள் குறித்த சுருக்கவுரை

| | |
|---|---|
| 1. சட்டரீதியான இணக்கம் | • தேசிய சட்டம் மற்றும் பிற பொருத்தமான சட்டங்களுக்கு எப்பொழுதும் கீழ்ப்படிதல்<br>• அறிவுசார் சொத்து உரிமைகளை மதித்தல் |
| 2. தொழிலாளர் | • குழந்தை தொழிலாளர் இல்லை<br>• வேலைவாய்ப்பில் பாகுபாடு இல்லை<br>• கட்டாய தொழிலாளர்கள் இல்லை<br>• சங்கம் அமைப்பதற்கும் கூட்டாக பேரம்பேசுவதற்குமான சுதந்திரத்தை மதித்தல்<br>• கடினமாக அல்லது மனிதாபிமானமற்ற முறையில் தொழிலாளர்கள் நடத்தப்படுவதில்லை<br>• பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான பணிச் சூழல்<br>• பாதிப்பிற்குள்ளாகும் சாத்தியமுடைய குழுக்களுக்கு சிறப்பு கவனிப்பு<br>• நிரந்தர வேலைவாய்ப்பு<br>• வாழ்வாதார ஊதியம், குறித்த நேரத்தில் வழங்கப்படும்<br>• அதிகப்படியான வேலை நேரங்கள் இல்லை |
| 3. சுற்றுச்சூழல் | • சட்டத் தேவைகளுடன் இணக்கம்<br>• சுற்றுச்சூழல் செயல்திறன் மேலாண்மை<br>• ஆற்றல் மற்றும் தண்ணீர் உபயோகத்திறனை மேம்படுத்துதல்<br>• சுற்றுச்சூழலுக்குள் வெளியிடப்படும் கழிவுகளையும் மாசு வாயுக்களையும் குறைத்தல்<br>• விநியோக சங்கிலியில் ஊறுவிளைவிக்கும் இரசாயனங்களை குறைத்தல் |
| 4. ஊழல் தடுப்பு | • லஞ்சமும் ஊழலும் இல்லை |

# 1. சட்டரீதியான இணக்கம்

- விநியோகஸ்தர்கள் தேசிய மற்றும் பிற பொருத்தமான சட்டங்களை எல்லா காலத்திலும் மதித்து நடக்கவேண்டும்.
- சட்டத்திலுள்ள விதிகளும் ஒழுக்க விதிகளும் ஒரே காரியத்தை குறித்து சொல்லும் இடங்களில் விநியோகஸ்தர்கள், தொழிலாளர்கள் அல்லது சுற்றுச்சூழலுக்கு அதிக பாதுகாப்பு அளிக்கும் விதிகளை கடைபிடிக்க வேண்டும்.
- விநியோகஸ்தர்கள் அறிவுசார் சொத்து உரிமைகள் மதிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும், சட்டவிரோதமான நகல்கள் கொடுக்கப்படுவதும் தயாரிக்கப்படுவதும் கூடாது.

# 2. தொழிலாளர்

இந்த பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள தேவைகளாவன சர்வதேச தொழிலாளர் அமைப்பு, உலகளாவிய சமூக இணக்க திட்டம் மற்றும் நன்னெறி வர்த்தக முயற்சி அடிப்படை சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

C&A மனித உரிமைகளை மதிக்கிறது, மனித உரிமை மீறலுடன் இணங்குவதை தவிர்க்கிறது. விநியோகஸ்தர்கள், தொழிலாளர்களின் மனித உரிமைகளை மதிக்கவேண்டுமெனவும், இந்த பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள தேவைகள் கடைபிடிக்கபட வேண்டுமெனவும் C&A எதிர்பார்க்கிறது.

## 2.1. குழந்தை தொழிலாளர்

- தொழிலாளர்களின் வயது குறைந்த பட்சம் 16 வயதாக இருத்தல் வேண்டும் அல்லது கட்டாய கல்விக்கான விதிமுறைகள் உள்ளிட்ட உள்ளூர் சட்டங்களின் படி அதிக வயது என்றால், அவ்வயதிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
- ஆபத்தான வேலை அல்லது இரவில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வயது குறைந்தபட்சம் 18 வயதாயிருத்தல் வேண்டும்.

## 2.2. பாகுபாடு

- விநியோகஸ்தர்கள் வேலைவாய்ப்பில்[2] பாகுபாட்டை ஆதரித்தல், அல்லது சகித்தலில் ஈடுபடக்கூடாது.
- வேலையை செய்வதற்கான திறனும் விருப்பமும் மட்டும் தான் தொழிலாளர்களை பிரித்துப்பார்ப்பதற்கான ஒரே அடிப்படையாக இருக்க வேண்டும் மாறாக அவர்களது தனிப்பட்ட குணங்களாக[3] இருக்கக்கூடாது.

---

2. ஆட்சேர்ப்பு, பணிக்கு அமர்த்துதல், பயிற்சி, பணி சூழல், பணி பொறுப்புகள், இழப்பீடு, பதவி உயர்வுகள், ஒழுக்கம், வேலையிலிருந்து நீக்கப்படுதல் மற்றும் ஓய்வுபெறுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
3. அது போன்று தனிநபர் குணங்களாவன பின்வருவற்றை உள்ளடக்கியதாகும், ஆனால் இவை மட்டுமே தனிநபர் குணங்களல்ல: பாலினம், வயது, மதம், மண நிலை, இனம், ஜாதி, சமூக பின்னணி, நோய்கள், ஊனம், கர்ப்பம், இனம் மற்றும் தேசிய மூலம், நாட்டுரிமை, தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பணியாளர் அமைப்புகளில் அங்கத்தினராக இருத்தல், அரசியல் தொடர்பு, மற்றும் பாலியல் நிலை.

## 2.3. கட்டாய தொழிலாளர்

- தொழிலாளர்கள் தங்கள் வேலையை அவர்களது தன்னார்வத்தினால் செய்ய வேண்டும், அதாவது கொத்தடிமைகள், ஒப்பந்த தொழிலாளர்கள், மற்றும் சிறை தொழிலாளர்கள், உள்ளிட்ட எல்லா வகையான கட்டாய தொழிலாளர்களும் தடைசெய்யப்படுகிறார்கள்.
- வைப்புத்தொகை பெறுதல், அடையாள ஆவணங்களை கையகப்படுத்துதல் அல்லது ஊதியத்தை பிடித்து வைத்தல் போன்ற பணி சுதந்தரத்தை பாதிக்கும் செயல்களில் விநியோகஸ்தர்கள் ஈடுபடக்கூடாது.
- நியாயமான அறிவிப்பிற்கு பின்னர் தொழிலாளர்கள் தங்களது வேலை ஒப்பந்தத்தை துண்டித்துக்கொள்வதற்கான அனுமதியை விநியோகஸ்தர்கள் வழங்கவேண்டும்.

## 2.4. சங்கம் அமைப்பதற்கான சுதந்திரம்

- தொழிலாளர் பிரதிநிதிகள் மீது திறந்த மற்றும் ஒத்துழைக்கும் மனப்பாங்கை விநியோகஸ்தர்கள் மேற்கொள்ளவேண்டும், தொழிலாளர்கள் அவர்களுக்கு விருப்பமான தொழிற்சங்கங்களில் சேரவும் கூட்டாக பேரம்பேசவும் அனுமதிக்க வேண்டும்.
- அவர்களது பிரதிநிதித்துவ செயல்பாடுகளை செய்யும் படிக்கு தொழிலாளர் பிரதிநிதிகள் வேலை இடத்திற்கு வருவதை விநியோகஸ்தர்கள் அனுமதிக்க வேண்டும்.
- சங்கம் அமைக்கும் உரிமையும் கூட்டாக பேரம் பேசும் உரிமையும் சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தப்பட்ட இடங்களில், மாற்று வடிவங்களில் தொழிலாளர் பிரதிநிதித்துவம் மற்றும் பேச்சுவார்த்தை ஏற்படுத்துவதற்கான வசதிகளை விநியோகஸ்தர்கள் செய்ய வேண்டும், அவற்றை தடுக்கக்கூடாது.
- தொழிற்சாலையினுள் ஏற்படும் பிரச்சனைகளையும் தொழிலாளர்கள் குறைகளையும் தீர்த்துக்கொள்ள ஏதுவாக திறன்வாய்ந்த துயர்துடைப்பு நடைமுறையை விநியோகஸ்தர்கள் செயல்படுத்த வேண்டும்.

## 2.5. கடினமாக அல்லது மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுதல்

- விநியோகஸ்தர்கள், தொழிலாளர்களை மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்த வேண்டும். கேலி செய்தல் அல்லது கேலி செய்யப்படுதலை சகித்தல், துன்புறுத்துதல்[4], மிரட்டல், வன்முறை, உடல் ரீதியான தண்டனை அல்லது எந்த வகையான துர்பிரயோகம்[5] போன்ற செயல்களில் விநியோகஸ்தர்கள் ஈடுபட கூடாது .
- விநியோகஸ்தர்கள் ஒழுங்கு நடைமுறைகளை எழுத்துப்பூர்வமாக்கி அவர்களது தொழிலாளர்களுக்கு அவற்றை தெளிவாக விளக்க வேண்டும், மேற்கொள்ளப்பட்ட எல்லா ஒழுங்கு நடவடிக்கைகளையும் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.
- ஒழுங்கு நடவடிக்கைகள் ஏற்றவையாக இருப்பதை விநியோகஸ்தர்கள் உறுதி செய்ய வேண்டும். உடல் அல்லது மன ரீதியான தண்டனை இருத்தல் கூடாது.

---

4. பாலியல் துன்புறுத்தலை உள்ளடக்கியது.
5. உடல், மன மற்றும் வார்த்தை துர் பிரயோகம் உள்ளிட்டது.

## 2.6. சுகாதாரம் & பாதுகாப்பு

- போதிய வெளிச்சம், வெப்பம் மற்றும் காற்றோட்டம் ஆகியவற்றுடன் பாதுகாப்பும் சுகாதாரமும் உள்ள வேலையிடத்தை விநியோகஸ்தர்கள் அளிக்க வேண்டும்.
- விபத்துக்களை தவிர்க்கவும் வேலையின் போது ஏற்படக்கூடிய ஆரோக்கிய பாதிப்புகளை தவிர்க்கவும் தேவையான முன்னேற்பாடுகளை விநியோகஸ்தர்கள் செய்ய வேண்டும். இரசாயனங்களை பாதுகாப்பதிலும் கையாளுவதிலும் பாதுகாப்பை உறுதிசெய்தல், இயந்திரங்கள் மற்றும் சாதனங்களின் பாதுகாப்பு, மின் பாதுகாப்பு, தங்குமிட வசதிகள் அளிக்கப்பட்டிருந்தால் அவைகள் உள்ளிட்ட கட்டிடங்களின் பாதுகாப்பு, உறுதி மற்றும் நிலைப்புத்தன்மை, மற்றும் தீ தடுப்பிற்கான போதிய பாதுகாப்பு முறைகளையும் அளிக்கவேண்டும்.
- தீ பாதுகாப்பு பயிற்சி, கழிவு மேலாண்மையில் பயிற்சி மற்றும் இரசாயனங்கள் மற்றும் பிற ஆபத்தான பொருட்களை கையாள பயிற்சி உள்ளிட்ட வழக்கமான சுகாதாரம் & பாதுகாப்பு பயிற்சிகளை தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டும்.
- விநியோகஸ்தர்கள்ா் சுத்தமான கழிப்பிட வசதிகள், குடி நீர், உணவு தயாரிப்பு மற்றும் பாதுகாத்தலில் சுகாதாரம் (பொருத்தமான இடத்தில்) ஆகியவற்றை அளிக்கவேண்டும்.
- தங்குமிடங்கள் அளிக்கப்பட்டிருந்தால் அவைகளை சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் தொழிலாளர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையிலும் இருத்தல் வேண்டும்.

## 2.7. பலவீனமானவர்களை பாதுகாத்தல்

- பெண்கள், வீட்டுப்பணி வேலையாட்கள், முகமை வேலையாட்கள், தற்காலிக வேலையாட்கள், மற்றும் புலம் பெயர்ந்த வேலையாட்கள் போன்ற பாதிப்பிற்கு ஆளாகக்கூடிய மிக பலவீனமானவர்களின் உரிமைகளுக்கு விநியோகஸ்தர்கள் சிறப்பு கவனம் அளிக்கவேண்டும்.
- வீட்டுப்பணி வேலையாட்களை வேலைக்கு அமர்த்தும் விநியோகஸ்தர்கள், ஒழுக்க விதிகளுக்கு துணை வழிகாட்டுதல்களில் இடம் பெற்றுள்ள C&A வீட்டுப்பணி வேலையாட்களை பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதலின் படி நடக்க வேண்டும்.

## 2.8. நிரந்தர வேலைவாய்ப்பு

- தேசிய சட்டம் மற்றும் நடைமுறையின் வாயிலாக நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற பணி உறவின் அடிப்படையில் தொழிலாளர்களை விநியோகஸ்தர்கள் வேலையில் அமர்த்த வேண்டும்.
- இப்படிப்பட்ட உறவின்[6] வாயிலாக ஏற்படும் சட்ட கடமைகளை தவிர்க்க விநியோகஸ்தர்கள்முயற்சிக்க கூடாது.

---

6. உதாரணமாக, ஒழுங்கற்ற முறையில் நடத்தப்படும் தொழிற்பயிற்சித் திட்டங்கள் வாயிலாக அல்லது குறிப்பிட்ட கால ஒப்பந்தத்தை அதிகப்படியாக பயன்படுத்துதல் வாயிலாக.

## 2.9. ஊதியம்

- விநியோகஸ்தர்கள் , சட்ட ரீதியான குறைந்தபட்சம் / அல்லது தொழில் துறை அளவை நிர்ணயங்களின் படி , எது அதிகமானதோ அதன்படியான ஊதியம், கூடுதல் பணி நேர ஊதியம், நன்மைகள் மற்றும் ஊதியத்துடன் கூடிய விடுப்பு ஆகியவற்றை தொழிலாளர்களுக்கு அளிக்கவேண்டும்.

- விநியோகஸ்தர்கள், கூடுதல் நேரப்பணி செய்யும் தொழிலாளர்களுக்கு அவர்களது வழக்கமான வருமானத்தில் 125% -க்கு குறையாத அல்லது சட்டத்தால் அதற்கும் அதிகமாக கொடுக்க தீர்மானிக்கப்பட்டால் அதன்படியான உயர் மதிப்பு விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

- ஊதியம் மற்றும் இழப்பீடு[7] ஒழுங்காக குறித்த நேரத்தில் வழங்கப்பட வேண்டும், அது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானதாகவும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வருமானமாகவும் அளிக்கப்பட்ட வேண்டும்.

- விநியோகஸ்தர்கள், தேசிய சட்டத்தில் சொல்லப்படாத காரணங்களுக்காக, அல்லது ஒழுங்கு நடவடிக்கையில் இல்லாத எந்த பிடித்தங்களும் ஊதியத்திலிருந்து செய்யக்கூடாது.

- ஊதியம் உள்ளிட்ட பணி நிபந்தனைகளை பணியை தொடங்குவதற்கு முன்பே எழுத்துப்பூர்வமாகவும் புரிந்துக்கொள்ளும் வகையிலும் தொழிலாளர்களுக்கு தகவலை விநியோகஸ்தர்கள் அளிக்க வேண்டும். மேலும், அவர்களது ஊதியம் குறித்த விவரங்களை ஒவ்வொரு முறையும் ஊதியத்துடன் அளிக்க வேண்டும்.

## 2.10. வேலை நேரம்

- ஒப்பந்தம் மூலமாக நிலையான வேலை நேரங்கள் குறித்து விநியோகஸ்தர்கள் விவரிக்க வேண்டும், வேலை நேரங்கள், தேசிய சட்டம் அல்லது கூட்டு உடன்பாடுகளின்படி இருக்கவேண்டும். கூடுதல் நேரப்பணியை சேர்க்காமல் ஒரு வாரத்திற்கு அதிகபட்சமாக 48 மணிநேரங்கள்.

- விநியோகஸ்தர்கள் கூடுதல் நேர பணி என்பதை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும், கூடுதல் நேர பணி செய்யும்படி கேட்டுக்கொள்வதை வழக்கமாக கொள்ளக்கூடாது. மேலும். கூடுதல் நேரப் பணி என்பது தொழிலாளர்கள் விருப்பத்தின் அடிப்படையில் தான் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, தொழிலாளர்களை கூடுதல் நேரம் பணியாற்றும்படி கட்டாயப்படுத்தக்கூடாது.

- ஏழு நாள் கால அளவில் 60 மணி நேரங்களுக்கு மிகாமல் பணி நேரம் இருக்கவேண்டும் உண்மையிலேயே விதிவிலக்கான, முன்னரே கணிக்க முடியாத சூழ்நிலைகள் இதற்கு விதிவிலக்கானவையாகும்[8].

- தொழிலாளர்கள் ஓய்வு எடுக்க விநியோகஸ்தர்கள் அனுமதிக்க வேண்டும், ஒவ்வொரு ஏழு நாட்கள் கால அளவிற்கும்[9] குறைந்தது ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டும்,சட்டரீதியான விடுமுறைகள் எடுக்க அனுமதிக்க வேண்டும். .

---

7. நிலையான பணி நேரங்களுக்கு, அதாவது. கூடுதல் நேர பணி இல்லாமல்.
8. பின்வரும் நிபந்தனைகள் சந்திக்கப்பட்டால் மட்டுமே: 1) தேசிய சட்டத்தால் அனுமதிக்கப்பட்டது, 2) ஒரு கூட்டு உடன்பாட்டால் அனுமதிக்கப்பட்டது, மற்றும் 3) பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை காக்கும் பொருட்டு பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
9. அல்லது தேசிய சட்டத்தால் அனுமதிக்கப்பட்டபடி ஒவ்வொரு 14 நாள் கால அளவிற்கும் 2 நாட்கள் விடுப்பு.

# 3. சுற்றுச்சூழல்

நல்ல சுற்றுச்சூழல் செயல்திறன் என்பது ஒரு தொழிலின் எதிர்கால வெற்றிக்கான முன்நிபந்தனை என்று C&A நம்புகிறது. எனவே, காலப்போக்கில், இணக்கத்துடன் நிறுத்தாமல் அதற்கும் மேலாக சுற்றுச்சூழல் செயல்திறனை உயிர்ப்புடன் விநியோகஸ்தர்கள் நிர்வகிக்க வேண்டுமென C&A எதிர்பார்க்கிறது. தேவையான இடத்தில், C&A விநியோகஸ்தர்களுடன் நெருங்கி வேலை செய்து அவர்கள் அதை கடைபிடிக்க உதவும்.

## 3.1. சட்டரீதியான இணக்கம்

- விநியோகஸ்தர்கள் பொருத்தமான உள்ளூர் மற்றும் தேசிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுடன் இணங்குதல் அவசியம். சர்வதேச சுற்றுச்சூழல் பாதுகாப்பு தரத்தை எட்டுவது விநியோகஸ்தர்கள் நோக்கமாக இருத்தல் வேண்டும்.
- விநியோகஸ்தர்கள் அவசியமான எல்லா சுற்றுச்சூழல் அனுமதிகளை பெற்று அவைகள் நடப்பில் இருக்கும் படி செய்ய வேண்டும்.

## 3.2. சுற்றுச்சூழல் செயல்திறன் மேலாண்மை

- விநியோகஸ்தர்கள் சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு[10] ஒன்றை ஏற்படுத்தி அதனின் செயல்திறனுக்கான பொறுப்பை ஒரு மூத்த மேலாண்மை பிரதிநிதிக்கு அளிக்க வேண்டும்.
- ஆற்றல் & தண்ணீர் பயன்பாடு, மாசு வெளியீடு & சுற்றுச்சூழலுக்குள் வெளியேற்றப்படுவைகள், மற்றும் கழிவுகளை அகற்றுதல் ஆகியவற்றை விநியோகஸ்தர்கள் அளக்க வேண்டும். மேலும் கேட்டுக்கொள்ளப்பட்டால் இவை குறித்த தகவல்களை C&A- யிடம் அளிக்கவேண்டும்.
- விநியோகஸ்தர்கள், சுற்றுச்சூழல் தாக்கத்தை வணிக முடிவுகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும், சுற்றுச்சூழல் செயல்திறனை மேம்படுத்துவதற்கான ஒரு முற்போக்கான அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும், அவர்களது விநியோகஸ்தர்கள் துணை ஒப்பந்தக்காரர்களும் அவ்வண்ணமே செய்யவேண்டும்.

## 3.3. வளங்களை பயன்படுத்துதல் & பருவநிலை மாறுதல்

- கட்டிடங்கள், போக்குவரத்து &தயாரிப்பு ஆகியவற்றில் ஆற்றல் திறனை தொடர்ச்சியாக மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை விநியோகஸ்தர்கள் எடுக்கவேண்டும் மேலும், புதுப்பிக்கவல்ல அல்லது கார்பன் குறைந்த தீவிர ஆற்றல் ஆதாரத்தை பயன்படுத்துவதற்கான சரியான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.
- ஈர செய்முறைகளில் ஈடுபடும் விநியோகஸ்தர்கள் தண்ணீர் திறனை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்
- காடழிப்பு, மிருக வதை, or பலவீனமான சூழல் மண்டலங்கள் அல்லது அருகிவரும் இனங்கள்[11] மீது மோசமான தாக்கம் ஆகியவற்றை அவர்களது வாங்கும் முடிவுகள் ஏற்படுத்த வில்லை என்பதை உறுதி செய்ய சரியான முயற்சிகளை விநியோகஸ்தர்கள் மேற்கொள்ள வேண்டும்.

---

10. ஒரு சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு என்பது சுற்றுச்சூழல் செயல்திறன் குறித்த எழுதப்பட்ட கொள்கைகள், திட்ட உபகரணங்கள் மற்றும் அளவீடு, மேலாண்மை மற்றும் அறிக்கை அளித்தல் செயல்முறைகளை உள்ளடக்கியதாகும்.
11. CITES மற்றும் IUCN ரெட் பட்டியலால் விவரணை செய்யப்பட்டபடியே..

### 3.4. கழிவு & மாசு வெளியீடு

- வடிவமைப்பு மற்றும் செயல்பாட்டு திறன் மூலமாக கழிவை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை விநியோகஸ்தர்கள் மேற்கொள்வதோடு, எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் மறுபயன்பாடு & மறுசுழற்சி செய்ய வேண்டும்.

- விநியோகஸ்தர்கள், கழிவு நீர் வெளியேற்றும் முன் அதை பதனிட வேண்டும். தேசிய மற்றும் உள்ளூர் நீர் வெளியேற்ற இணக்க தரத்தை சந்திக்க தேவையானவைகளின்படி கழிவுநீரை பரிசோதிக்க வேண்டும், மேலும் C&A கேட்டுக்கொள்ளும் போது, கழிவு நீர் தர தரவுகளை பங்குதாரர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

- விநியோகஸ்தர்கள், இரைச்சல், காற்று, மண் மற்றும் நிலத்தடி நீரில் வெளியிடபடும் மாசுவை குறைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

### 3.5. ஆபத்தான இரசாயனங்கள்

- விநியோக சங்கிலியிலிருந்து ஆபத்தான பொருட்களை அகற்றுதல் என்பதை நோக்கமாக கொண்டு விநியோகஸ்தர்கள், அவர்களது சொந்த விநியோகஸ்தர்கள், C&A யுடன் இணைந்து செயல் படவேண்டும்.

## 4. ஊழல் தடுப்பு

வணிக நடைமுறைகளில் உயர் நன்னெறி தரத்தை தங்களது விநியோகஸ்தர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என C&A எதிர்பார்க்கிறது.

- பொருத்தமான லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு சட்டங்கள் எல்லாவற்றுடனும் விநியோகஸ்தர்கள் இணக்கமாக இருக்கவேண்டும்.

- விநியோகஸ்தர்கள் ஆதாயத்திற்காக அளிக்கப்படும் பணம் உள்ளிட்ட லஞ்சத்தை கொடுக்கவோ அளிக்கவோ கேட்கவோ பெறவோ கூடாது.

- ஊழல் தடுப்பு கொள்கை மற்றும செயல்பாடுகளை விநியோகஸ்தர்கள் கொண்டிருக்கவேண்டும், அவ்வப்போது அதை மறு ஆய்வு செய்து அவை சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

# ஒழுக்க விதிகளின்படி நடப்பதை உறுதிசெய்தல்

ஒழுக்க விதிகளில் கொடுக்கப்பட்டுள்ளவைகளின்படி முழுமையாக நடப்பது என்பது ஒரு சவாலான செயல் என்பதை C&A உணர்ந்தே இருக்கிறது, ஆனால் C&A மற்றும் அதன் விநியோகஸ்தர்ளின் எதிர்கால பொருளாதார வெற்றிக்கு இது இன்றியமையாதது என்பதை நம்புகிறது.

ஒழுக்க விதிகளின்படி நடப்பது என்பது நமது தரத்தை அல்லது வழங்குதல் நிபந்தனைகள் ஆகிவற்றிற்கு சற்றும் குறைந்தது அல்ல. திறந்தமனதுடனும், உண்மையாகவும், தொடர்ச்சியான மேம்பாட்டிற்கு என அர்ப்பணிப்புடனும் இருக்கும் விநியோகஸ்தர்கள் பணியாற்ற தீவிர முயற்சிகளை மேற்கொள்வதுடன், தேவைகளை அடைவதற்கான ஆதரவையும் C&A அளிக்கும்.

## 1. நிர்வாக செயல்திறன்

- ஒழுக்க விதிகள் கடைபிடிக்கப்படுவதை உயிர்ப்புடன் நிர்வகிப்பதற்காக ஒரு திறன்மிக்க மேலாண்மை அமைப்பை விநியோகஸ்தர்கள் வைத்திருக்க வேண்டும்.மூத்த மேலாண்மை பிரதிநிதிக்கு இந்த பொறுப்பை அளிக்க வேண்டும்.

- ஒழுக்க விதிகளில் கொடுக்கப்பட்டுள்ளவைகள் குறித்தான விழிப்புணர்வை தொழிலாளர்களுக்கு விநியோகஸ்தர்கள் ஏற்படுத்த வேண்டும், மேலும் அதனை செயல் படுத்துவது எப்படி என்பது குறித்தான பயிற்சியை அதன் மேலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு வழங்க வேண்டும்.

- விநியோகஸ்தர்கள், உள் மதிப்பீடுகளை சீரான இடைவெளியில் ஒழுங்காக நடத்தவேண்டும்.

- சொந்தமானது அல்லது துணைஒப்பந்தம் செய்யப்பட்டதுமான எல்லா தயாரிப்பு நிறுவனங்களும் தயாரிப்பை தொடங்குவதற்கு முன்னர் C&A- யிடமிருந்து விநியோகஸ்தர்கள் ஒப்புதல் பெறவேண்டும். அங்கீகாரமற்ற தயாரிப்பு நிறுவனங்களின் பயன்பாடு உறுதியாக தடைசெய்யப்பட்டுள்ளது.

- C&A-யின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் தயாரிப்பு செய்முறையின் எந்த பகுதியையும் விநியோகஸ்தர்கள் துணை ஒப்பந்தம் செய்யக்கூடாது. a) துணை ஒப்பந்தக்காரர் ஒழுக்க விதிகளின்படி நடக்க ஒத்துக்கொண்டார், மற்றும் b) துணை ஒப்பந்தக்காரர்கள் தணிக்கையை வெற்றிகரமாக கடந்தார். இவ்விரண்டிற்கு பிறகு மட்டுமே அவர் துணை ஒப்பந்தகாரராக செயல்பட இயலும்.

- துணை ஒப்பந்தக்காரர்களால் ஒழுக்க விதிகள் கடைபிடிக்கபடுவதை உறுதி செய்வது விநியோகஸ்தர் பொறுப்பாகும்.

## 2. கண்காணிப்பு & வெளிப்படைத்தன்மை

- அறிவிக்கப்பட்டிருந்தாலும் அறிவிக்கப்படாவிட்டாலும், C&A மற்றும்/அல்லது அதன் பிரதிநிதிகளுக்கு மதிப்பீடு செய்வதற்கான அனுமதியை விநியோகஸ்தர்கள் வழங்கவேண்டும்.

- மதிப்பீடின் பொழுது விநியோகஸ்தர்கள் ஒத்துழைப்பு அளிப்பதுடன் வெளிப்படையாகவும் இருக்க வேண்டும், தொழிலாளர்கள், பதிவேடுகள், வேலை இடங்கள், தங்கும் இடங்கள் (இருக்குமாயின்) ஆகியவற்றை கட்டுப்பாடின்றி அணுகுவதற்கான அனுமதியையும் அளிக்கவேண்டும்.

- தொழிலாளர் நேர்காணல்கள் ஒரு தனிப்பட்ட இடத்தில் நடைபெற விநியோகஸ்தர் அனுமதிக்கவேண்டும். கேள்விகளுக்கு எப்படி பதிலளிக்க வேண்டும் என்பதற்கான பயிற்சியை தொழிலாளர்களுக்கு அளிக்கக்கூடாது.

- விதிகள் கடைபிடிக்கப்படுவதை திறம்பட மதிப்பீடு செய்ய ஏதுவாக, விநியோகஸ்தர்கள் முழுமையான மற்றும் துல்லியமான பதிவேடுகளை[12] பராமரிக்க வேண்டும். அதன் செயல்பாடுகளின் எந்த கோணத்தையும் தவறாக சித்தரிக்கவோ தகவல்களை மாற்றியமைக்கவோ கூடாது.

- விநியோகஸ்தர்கள் பெயர்கள், இடங்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றோடு ஒழுக்க விதிகளின் கீழ் அவர்களது செயல்திறன் குறித்த தகவல்களையும், மூன்றாம் நபருக்கு தெரிவிக்கும் அனுமதியை C&A-க்கு விநியோகஸ்தர் அளிக்க வேண்டும்.

- C&A கேட்டுக்கொண்டால், C&A மற்றும்/அல்லது அதன் பிரதிநிதிகள், தங்களது சொந்த விநியோகஸ்தர்கள் மற்றும் துணை ஒப்பந்தக்காரர்களிடத்தில் தணிக்கை செய்ய தேவையான உதவிகளை விநியோகஸ்தர்கள் அளிக்க வேண்டும்.

## 3. தடுப்பு நடவடிக்கைகள்

- C&A-யில் பேர்னஸ் சேனல் என்றழைக்கப்படும் இரகசிய விசில் ஊதும் அமைப்பு ஒன்றுள்ளது. இதன் வாயிலாக, விநியோகஸ்தர்கள், ஆலை தொழிலாளர்கள், மற்றும் C&A பணியாளர்கள் உள்ளிட்ட எல்லா பங்குதாரர்களும், நெறியற்ற நடத்தை மற்றும் ஒழுக்க விதி மீறல்கள் குறித்து C&A-யின் உச்ச மேலாண்மைக்கு தெரிவிக்கலாம்.

- ஒழுக்க விதிகள் மீறப்படும் சூழ்நிலையில், தேவைப்பட்டால் C&A வின் துணையுடன் ஒரு முன்னேற்ற திட்டத்தை உருவாக்க வேண்டுமென விநியோகஸ்தர்களை C&A கேட்டுக்கொள்ளும் மேலும் அதை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நடைமுறைப்படுத்தவும் கேட்டுக்கொள்ளும். இந்த கால அளவு விதிமீறலின் தன்மையை பொறுத்து மாறுபடும்.

- குழந்தை தொழிலாளர், கட்டாயப்படுத்தப்பட்ட அல்லது சிறை தொழிலாளர், லஞ்சம், மோசடி, போலி பாகங்களை பயன்படுத்துதல், அங்கீகாரமற்ற தயாரிப்பு நிறுவனங்களை பயன்படுத்துதல் உள்ளிட்ட ஆனால் இவைமட்டுமல்லாத, அதிர்ச்சி உண்டாக்குகின்ற விதிமீறல்கள் ஏற்படும் சூழ்நிலையிலும் மற்றும்/அல்லது ஏற்றுக்கொண்ட முன்னேற்ற திட்டங்களை செயல்படுத்த தொடர்ச்சியாக தவறுதல் என்ற சூழல்நிலையிலும் விநியோகஸ்தர்கள் உடனான வர்த்தக உறவை துண்டிப்பதற்கான உரிமை C&A-விற்கு உள்ளது. கொடுத்த ஆர்டர்களை ரத்து செய்தலும் இதில் அடங்கும்.

- விநியோகஸ்தர்கள் மற்றும் அவர்களது துணை ஒப்பந்தக்காரர் (கள்) ஒழுக்க விதிகளை மீறியதால் ஏற்படும் வருவாய் இழப்பு மற்றும்/அல்லது இலாப இழப்பு உள்ளிட்டவையால் C&A-க்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் செலவினங்களுக்கு விநியோகஸ்தர்கள் தான் பொறுப்பேற்க வேண்டும்.

12. எடுத்துக்காட்டாக, வேலை நேர பதிவேடுகள் மற்றும் ஊதியப் பட்டியல் ஆவணங்கள்.

உண்மையான கடமையுணர்ச்சியுடன் தொழிலாளர் நிலை மற்றும் சுற்றுச்சூழல் செயல்திறன் மேம்பட சேர்ந்துழைக்கும் விநியோகஸ்தர்கள் நீண்ட கால உறவை நிலைநிறுத்த C&A விரும்புகிறது, மேலும் அவர்கள் எதிர்கொள்ள நேரும் தடைகளை எதிர்கொள்ள அவர்களுக்கு உதவியும் செய்யும். ஒழுக்க விதிகளை செயல்படுத்துவதற்கு தேவையான மேலதிக விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு, தயவுசெய்து அவ்வப்போது மேம்படுத்தபடும் ஒழுக்க விதிகளின் துணை வழிகாட்டுதல்களை பார்க்கவும்.